**சிரம வாசனா நிதியம் -2013**

சிரம வாசனா நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார்கூற்றுக்கள் 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. குறித்த நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அனுசரணையாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிசார்கூற்றுக்கள்

### 2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சிரம வாசனா நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) நிறுவனத்தின் நிலையான சொத்துக்களுக்கான தேய்மானக் கொள்கை நிதிசார் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாததுடன் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 297,100 பெறுமதியான சொத்துக்களைக் கொள்வனவு செய்த திகதியைக் கருத்திற் கொள்ளாது தேய்மானம் மேற்கொள்ளப்படாமையால் ரூபா 14,785 கூடுதலாகத் தேய்மானஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஒலி முறைமை (sound system) மற்றும் வீடியோ கெமரா போன்ற சொத்துக்களது பயன்படு ஆயுட்காலம் முறையாகத் தீர்மானிக்கப்படாது நூற்றுக்கு 10 சதவீத தேய்மானத்திற்குள்ளாகியது.

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா அதிகாரச்சட்டம் | |
| (i) பிரிவு 6(உ) | இடர்களின்போது ஊழியர்களுக்கோ அல்லது அவர்களைச் சார்ந்திருப்போருக்கோ நிதிசார் மற்றும் ஏனைய நலன்களை வழங்க வேண்டுமாயினும், நலன்கள் வழங்கப்படவில்லை. |
| (ii) பிரிவு 13(1) | ஒவ்வொரு ஆண்டிலும் அச்சிடப்பட வேண்டிய லொத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அவை எவ்வகையானவை என்பன தொடர்பாக லொத்தர் சபையுடன் இணக்கப்பாட்டிற்கு வர வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெறவில்லை. |
| (iii) பிரிவு 13(2) | லொத்தர் மூலம் வழங்கப்படும் பரிசுகள் மற்றும் உரிமை கோரப்படாத பரிசுகள் தொடர்பாக உறுதி செய்யப்படுவது தொடர்பாக லொத்தர் சபையுடன் |

| | | |
|---|---|---|
| | | இணக்கப்பாட்டிற்கு வர வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெறவில்லை. |
| (iv) | பிரிவு 13(3) | லொத்தர் மூலம் வழங்கப்பட வேண்டிய பரிசுகளின் பெறுமதியையும் உள்ளடக்கியவாறான லொத்தர் சபை மேற்கொள்ள வேண்டிய செலவினமும் சம்பந்தமாக நிதியமும் லொத்தர் சபையும் இணக்கப்பாட்டிற்கு வர வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெறவில்லை. |
| (v) | பிரிவு 10(ஈ) | லொத்தர் மூலம் பெறப்படும் வருமானம், நிதியத்தைச் சேர வேண்டுமாயினும், 2008 ஒக்டோபரின் பின்னர் அவ்வருமானத்தைப் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறாமையால் மீளாய்வாண்டில் ரூபா 229,456,751 வருமானம் பெறப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பட்டோலையின் 2.1 ஆம் பந்தி | முறையான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| (இ) | 2002 டிசெம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணணித் துணைப் பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் சம்பந்தமாகப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 57,537,862 மிகையாகியதுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 47,201,339 ஆகியதால் நிதிசார் விளைவுகளில் ரூபா 10,336,523 முன்னேற்றம் காணப்பட்டது. மீளாய்வாண்டினது செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 6.18 மில்லியன் அதிகரித்திருந்தபோதும், மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 16.5 மில்லியன் அதிகரித்தமை இதற்குப் பிரதான காரணியாக அமைந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டில் பெறப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு 80.20 சதவீதம் சேமிப்பிற்குள்ளாகியது. நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கென மொத்த வருமானத்தில் 14.49 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டது. என அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வருவன அவதானிக்கப்பட்டன

(அ) ஆண்டின்போது 200 பேர் மாத்திரமே சட்ட உதவிகளை பெறுவதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்கும் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்திற்கும் இலக்கிடப்பட்டிருந்தனர்.

இலங்கையின் தனியார் துறை தொழில் புரிவோருடன் ஒப்பிடுகையில் அது போதியனதாக அமையவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) திட்டமிடப்பட்டிருந்த போதும், கைத்தொழில் விபத்துக்கள் தொடர்பான மருத்துவ உதவி சேவை நிகழ்ச்சித்திட்டம் / கைத்தொழில் சுகாதாரம் மற்றும் மானியம், நிதியுதவி அல்லது உலர் உணவுப் பொருள் நிகழ்ச்சித்திட்டம் என்பன (Medical assistance Programs Industrial accidents / Industrial Health & Awards, Finance Aid or Day ration Work) ஆண்டின் போது செயற்படுத்தப்படவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட அதிகாரச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இந் நிறுவனத்தினது நலன்கள் தீவடங்கிலும் பணியாற்றும் சகல ஊழியர்களுக்கும், அதிகாரச் சட்டத்தின் நோக்கத்திற்கமைய, வழங்கப்படுதல் நிறுவனத்தின் முக்கிய பணியாகும். கடந்த சில ஆண்டுகளிலும் இவ்வாண்டிலும் இந் நிறுவனம் பெற்ற நலன்களின் நூற்றுக்கு 75 க்கும் அதிகமான தொகை கொழும்பு மாவட்ட ஊழியர்களுக்கே வழங்கப்பட்டதன் காரணமாக நிறுவனத்தின் நோக்கத்தை எய்துவதற்கான நாடளாவிய சேவையை கடந்த சில ஆண்டுகளைப் போன்றே இவ்வாண்டிலும் நிறைவேற்ற இயலாது போயிற்று.

## 4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சட்ட உதவி வழங்கும் நடைமுறையைப் பிரசாரஞ் செய்வதற்கு ரூபா 169,680 செலவிடப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட உதவி ரூபா 50,000 ஆகும். உதவி வழங்கப்படுகையில் மாதாந்தம் ரூபா 15,000 க்குக் குறைவான சம்பளம் பெறும் ஊழியர்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுவதால் இந் நிலைமை உருவாகியிருந்தது.

## 4.3 முறைப்படி சுவீகரிக்கப்படாத அலுவலகக் கட்டிடம்

அலுவலகக் கட்டிடத்தின் சட்ட பூர்வ உரித்தைக் கணக்காய்வுத் தினம் வரை தொழில் திணைக்களம் சிரம வாசனா நிதியத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாதிருந்ததுடன், கட்டிடத்திற்கான வாடகை, நீர் மற்றும் மின்சார செலவினம் என்பன தொடர்பாகத் தொழில் திணைக்களத்துடன் இணக்கப்பாட்டிற்கு வராதுமிருந்தது.

# 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கென உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரைத் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு நியமிக்காமையால் நடப்பாண்டின்போது உள்ளகக் கணக்காய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

# 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிதிய முகாமைத்துவம்
(ஆ) செயலாற்றல்
(இ) உள்ளகக் கணக்காய்வு